# கோவையில் இந்தி எதிர்ப்புக் கூட்டம்.

## போட்டிக் கூட்டம் போட காங்கரஸ் முயற்சி.

[ஒரு நிருபர்]

கோயமுத்தூர், ஜூலை 3.

4-7-38-ந் தேதி மாலை 5-மணிக்கு இந்தி எதிர்ப்பாளர் ஆதரவில் கோவை டவுன்ஹால் மைதானத்தில் முனிசிபல் கௌன்சிலர் தோழர் ஜெ. எ. மூத்துசாமி நாயுடு அவர்கள் தலைமையில் ஒரு பிரம்மாண்டமான கூட்டம் கூடியது. முஸ்லிம் பிரமுகர்களும், கிறிஸ்தவ பிரமுகர்களும் ஏராளமாகக் கூடியிருந்தனர். காங்கரஸ் சர்க்கார் இந்தியைக் கட்டாயப்பாடமாக்குவதை எதிர்த்தும் கனம் ஆச்சாரியாரின் எதேச்சாதிகாரத்தைக் கண்டித்தும் தோழர் பி. வி. ஹனுமந்தராவ் விளக்கமாகப் பேசினார்.

இந்தி எதிர்ப்பாளர்கள் முதலிலே கமிஷனரிடம் எதிர்ப்புக் கூட்டம் போடுவதற்கு அனுமதி பெற்றிருந்தும் காங்கரஸ்காரர்கள் அதேயிடத்தில் அதேநேரத்தில் வேறு கூட்டம் கூட்ட ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். அவர்கள் போலீஸ் உதவியை நாடியும் இந்தி எதிர்ப்பாளர் கமிஷர் அனுமதி பெற்றிருந்ததால் நாங்கள் குறுக்கிடப் பிரியப்படவில்லை.

இதன் பேரில் காங்கரஸ்காரர்கள் ஷை மைதானத்துக்குக்கிழக்கே ஒரு கூட்டத்தை நடத்தினார்கள். இருந்த போதிலும் இந்தி எதிர்ப்புக் கூட்டம் இரவு 10 மணி வரை மிக வெற்றிகாமாக நடந்தேறியது.